2020 ஜனவரி 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத நிறைய கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். பேருந்து நிலையங்கள் அமைக்கப்படுவது என்பது உள்ளாட்சித் துறையின்கீழ் வரக்கூடியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த வழித்தடத்தில் பேருந்துகள் இயக்க வேண்டும் என்பது குறித்து எழுத்துபூர்வமாக விவரத்தைக் கொடுத்தாரேயானால், அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் பகுதிகளில் நிச்சயமாக மாண்புமிகு அம்மாவின் அரசு பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

'நீட்' தேர்வினை இரத்து செய்ய உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்திருப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

***திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் 'நீட்' தேர்வை இரத்து செய்ய வேண்டுமென்று சொல்லி உச்ச நீதிமன்றத்தில் அரசு மனு தாக்கல் செய்திருப்பதாக செய்திகள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. 'நீட்' தேர்வு விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள் 6–1–2020.*

[திரு. மு.க. ஸ்டாலின்] [2020 ஜனவரி 8

இந்நிலையில், கடைசி நாளுக்கு 2 நாட்களுக்கு முன்பாக இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் போடப்பட்டிருப்பதாக செய்திகள் வந்திருக்கின்றன. எனவே, நீட் தேர்வை இரத்து செய்ய வழக்கு போடப்பட்டிருக்கிறது. அந்த வழக்கு விசாரணைக்கு வந்திருக்கிறதா? அதுகுறித்து இந்த அரசு என்ன நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறது?

இதே சட்டமன்றத்தில் ஏற்கெனவே 2 மசோதாக்களை நாம் நிறைவேற்றி இருக்கிறோம். அதுவும், ஏகமனதாக நிறைவேற்றி, மத்திய அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறோம். அது திரும்பி வந்து விட்டதா? அல்லது நிராகரிக்கப்பட்டு விட்டதா? ஆக, அதுகுறித்து விவாதம் இந்த அவையிலே பல மணிநேரம் நடந்திருக்கிறது. இரண்டு அமைச்சர்கள்; அதாவது மாண்புமிகு சட்டத் துறை அமைச்சரும் அதற்கு பதில் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும் அதற்கு விளக்கம் தந்திருக்கிறார்கள். இடையிடையே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதற்கு சில விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள். ஆக, நிராகரிக்கப்பட்ட அந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், மத்திய அரசிடம் விளக்கம் கேட்கப்படுமென்று சொல்லப்பட்டது. அதைக் கேட்டீர்களா?

நண்பகல் 12–00

அதுமட்டுமல்ல, நிராகரிக்கப்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலையிலே, அந்த மசோதாவை மீண்டும் இந்த அவையிலே நிறைவேற்ற வேண்டுமென்று நான் எதிர்க்கட்சித் தலைவர் என்கிற முறையிலே கோரிக்கை வைத்தேன். மத்திய அரசிடம் விளக்கம் வந்ததற்குப் பிறகு, உடனடியாக அரசு வழக்கு தொடுக்குமென்று மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அழுத்தந்திருத்தமாகவும், ஆணித்தரமாகவும், கொஞ்சம் ஆவேசமாகவும்கூட இங்கே அவர் பதிவு செய்திருக்கிறார். 'NEET தேர்விற்கு விலக்கு கோரக்கூடிய அந்த மசோதாவை மீண்டும் நிறைவேற்ற, தேவைப்பட்டால் சட்டமன்ற சிறப்பு கூட்டத்தையே கூட்டுவோம்' என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதே அவையிலே பதிவு செய்திருக்கிறார்கள். ஆக, காலம்தான் போய்க்கொண்டிருக்கிறதே தவிர, NEET தேர்வு இரத்து குறித்து மத்திய அரசிடமிருந்து எந்த தகவலும் இதுவரையில் வரவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, சட்டமன்ற சிறப்புக் கூட்டமும் இதுவரையில் நடத்தப்படவில்லை. உச்ச நீதிமன்றத்தில் இப்போது போடப்பட்டிருக்கக்கூடிய இந்தப் புதிய வழக்கால் என்ன நடக்கப்போகிறது? NEET

2020 ஜனவரி 8] [திரு. மு.க. ஸ்டாலின்]

தேர்வுக்கு விண்ணப்பிக்கக்கூடிய கடைசி தேதியும் முடிந்துவிட்டது. இன்னும் உங்கள் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லையென்ற நிலையில்தான் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இது சமூக நீதிக்கும், கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய மாணவர்களுக்கும் செய்யக்கூடிய மிகப் பெரிய மாபெரும் துரோகம் என்பதை நான் இங்கே கடுமையாகப் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இதுகுறித்து அரசு என்ன விளக்கம் தரப் போகிறது என்பதைத் தங்கள் மூலமாக நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த NEET பிரச்சினை விவகாரம் குறித்து இப்போது இந்த அவையில் சில கருத்துகளைச் சொல்லியிருக்கிறார். அதில் முதலில் நீங்கள் சொன்னது 6 ஆம் தேதி அந்த NEET தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதி என்ற நிலையில், 4 ஆம் தேதி நீங்கள் ஒரு வழக்கு தொடுத்திருக்கிறீர்கள் என்று சொன்னீர்கள். அது தேதி 4. ஆனால், NEET தேர்விற்கு விண்ணப்பிக்கக்கூடிய அந்த 6 ஆம் தேதிக்கும் இதற்கும் தொடர்பில்லை. என்ன காரணத்தினால் இந்த வழக்கு வந்தது என்பதை நான் உங்களுக்குத் தெளிவாக எடுத்துரைக்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் அறிக்கையிலும் அதைத்தான் குறிப்பிட்டிருந்தீர்கள்.

இரண்டாவது, மாண்புமிகு அம்மாவின் அரசு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அம்மாவின் அரசு, அந்த NEET நுழைவுத் தேர்வு கொள்கையிலே, NEET தேர்வு எதிர்ப்புக் கொள்கையிலே இன்றுவரை உறுதியோடு இருக்கிறது என்பதிலே எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை.

மேலும், அவர் கடைசியிலே பேசுகிறபோது, இது சமூக நீதிக்கும், தமிழர்களுக்கும் மிகப் பெரிய துரோகம் என்ற வார்த்தையை அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார். அப்படியென்றால், துரோகம் என்ற வார்த்தையை அவர் சொன்னாரென்றால், துரோகத்திற்கான அந்த விதையை 27–12–2010–ல் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த விதையை விதைத்தது காங்கிரஸ் ஆட்சியில். திராவிட முன்னேற்றக்

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2020 ஜனவரி 8

கழகம் கைகோர்த்திருந்த, அவர்கள் alliance–ல் இருந்தபொழுதுதான் அந்த விதை விதைக்கப்பட்டது. அப்படியென்றால், அந்த விதையே இல்லாமல் இருந்திருந்தால் இந்தப் பிரச்சினையே வந்திருக்காது. ஆகவே, அவர்கள் விதையை விதைத்ததனாலே, பல்வேறு நிலைகளில், பல்வேறு காலக்கட்டங்களில், இப்போது அது High Court–ல் வழக்காகி, உச்ச நீதிமன்றத்தில் வழக்காகி, பிறகு இந்த சட்டமன்றத்தில் மசோதாவாகி மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. இப்படி பல்வேறு பிரச்சினைகளில் நாமெல்லாம் இப்படி பேசக்கூடிய, விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய நிலை இன்றைக்கு இருக்கிறது. (குறுக்கீடு) ஆகவே, நீங்கள் அங்கம் வகித்த காங்கிரஸ் ஆட்சியில்தான் NEET நுழைவுத் தேர்வு என்ற விதை விதைக்கப்பட்டது. (குறுக்கீடு) இல்லை, நீங்கள் பேசும்போது துரோகம் என்று சொன்னதால் நான் அவசியம் இதை அழுத்தத்தோடு பதிய வைக்க விரும்புகிறேன். துரோகம் என்று சொன்னால், உங்கள் துணையோடுதான் துரோகத்திற்கான விதை விதைக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) 27–12–2010 அன்று as a notification என்ற முறையிலே வெளியிடப்பட்டிருக்கிறது. மத்தியில் காங்கிரஸ் ஆட்சி; அன்றைக்கு காங்கிரசோடு கைகோர்த்திருந்தது திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி. விதையை விதைக்கவே வேண்டாமென்று அழுத்தமாகச் சொன்னது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (குறுக்கீடு) இதோ முடித்து விடுகிறேன். நான் முடித்து விடுகிறேன். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் தொடுத்த வழக்கில்தான் NEET தேர்வை 18–7–2013–ல் உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் இரத்து செய்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நாங்கள் அதற்கு உடன்படவில்லை. ஆக, நாங்கள் செய்தது துரோகம் அல்ல. இப்போது நடந்து கொண்டிருப்பதுதான் துரோகம். அதைத்தான் நான் வலியுறுத்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

2020 ஜனவரி 8]

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தில் நீங்கள் தொடர்ந்த வழக்கில் 18–7–2013–ல் தீர்ப்பு வந்தது என்று சொன்னீர்கள். அந்த வழக்கிற்கான காரணம் என்ன? 18–7–2013–ல் உச்சநீதிமன்றத்தலைமை நீதிபதி அவர்கள் நீட் தேர்வு இல்லை என்று தீர்ப்பு கொடுத்தார். அதற்கான காரணம் என்ன? ஒன்று. நீங்கள் தொடர்ந்த வழக்கில் நீங்கள் தீர்ப்பு வாங்கினீர்கள் என்று நீங்களே சொல்கிறீர்கள்; ஒரு பேச்சுக்கு அப்படியே வைத்துக்கொள்வோமே, அப்படியென்றால், சீராய்வு மனு,* Review Petition*; அடுத்து 11–4–2016–ல்தான் உச்ச நீதிமன்றத்தில், நீங்கள் சொன்ன அந்த 18–7–2013 உத்தரவை உச்ச நீதிமன்றம் திரும்பப் பெற்றுக்கொண்டது. உச்ச நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பை எதிர்த்து அம்மா அவர்கள் வழக்குத் தொடுத்தார்கள். அந்த வழக்கில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பைப் பெற்றோம். பெற்ற தீர்ப்பு, தமிழ்நாடு முழுவதும் இனிமேல் நீட் தேர்வு இல்லை என்று உச்ச நீதிமன்ற அமர்வு நிரூபித்துவிட்டது. அதற்குப்பிறகு* Review Petition *நீங்கள் போட்டீர்களா? அதனால்தான், சென்ற கூட்டத் தொடரில் சொன்னேன்,* Review Petition *ஏன் போடவேண்டுமென்று.* Review Petition*, சீராய்வு மனு போடாதீர்கள், போடாதீர்கள், போடாதீர்கள் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் எவ்வளவோ அழுத்தமாகச் சொன்னார்கள். அப்போது, மத்தியில் காங்கிரஸ் ஆட்சி இருந்தது. சீராய்வு மனு போட்டார்கள். அந்தச் சீராய்வு மனுவில்தான் நீங்கள் குறிப்பிட்டீர்களே, 18–7–2013 அன்று உச்ச நீதிமன்றம் அளித்த உத்தரவை திரும்பப் பெற்று,* withdraw the order and order for re–examination *என்று புதிதாக அவர்கள் தீர்ப்பு கொடுக்கிறார்கள். அப்போது, நாம் பெற்ற உத்தரவு* set aside *ஆகிவிட்டது. அந்த மூல வழக்கு இன்றும் நிலுவையில் இருக்கிறது. அதனால்தான் நான் சொன்னேன். அந்த மூல வழக்கு இன்றும் நிலுவையில் இருக்கிறது. நீங்கள் சொன்னதுபோன்று, நிலுவையில் இருந்த அந்த மூல வழக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுடைய அரசு, தொடர்ந்து பல்வேறு நிலைகளில், தொடர்ந்து கண்ணுங்கருத்துமாக, கவனத்தோடு, அந்தக் கொள்கையில் உறுதியாக இருந்து,* follow up *செய்துகொண்டிருக்கிறது.* Effective monitoring, continuous follow up monitoring *இருக்கிறது. இரண்டு மசோதாக்களை நாம் இந்த அவையில் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பியதற்கான விளக்கங்களை, நாம் ஒவ்வொரு மாதமும் கேட்டுக்கொண்டு, அந்த விளக்கம் இதுவரை பெறப்படவில்லை என்றாலும்கூட,*

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2020 ஜனவரி 8

சட்டப் போராட்டத்தில் எந்தத் தொய்வும் வந்துவிடக் கூடாது என்பதற்காக, நிலுவையில் இருக்கின்ற மூல வழக்கு விசாரணைக்கு வரும்போது வாதாடலாம். நம்முடைய Transfer Petition, High Court–லிருந்து Supreme Court–க்கு மாறுகின்ற அந்த மூல வழக்கு எண் 110, 111, Transfer Petition உடைய Numbers. கடந்த 2019 டிசம்பர் மாதம் 12 ஆம் தேதி, உச்ச நீதிமன்றத்தில் அந்த வழக்கு hearing–க்கு வந்தபோது, நமது அரசின் சார்பில் நியமிக்கப்பட்ட மூத்த வழக்குரைஞர் திரு. ராகேஷ் திவேதி அவர்கள் ஆஜரானார்கள். உச்ச நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வந்தபோது, நீதிபதிகள் என்ன சொன்னார்கள் என்றால், பிரிவு 10D–ஐ பொறுத்தவரையில், "you have a freedom to challenge the Section 10D" என்றார்கள். ஏனென்றால், ஏற்கெனவே regulation ஆக இருந்தது. Regulation இப்போது Act ஆக மாறிவிட்டது. So, நீதிமன்றத்தில் Regulation–ஐ எதிர்த்து நம்முடைய Petition Pending–ல் இருக்கிறது. இப்போது, Regulation, Act ஆக மாறிவிட்டதால், "withdraw the petition and you have a freedom to challenge the Section 10D of Indian Medical Council" என்று அவர்கள் சொன்னார்கள். இந்திய மருத்துவக் குழுமச் சட்டத்தினுடைய Section 10D–ல்தான் திருத்தம் செய்து நீட் தேர்வைக் கொண்டுவந்தார்கள். எனவே, அதை Challenge செய்வதற்குண்டான சுதந்திரம் தமிழக அரசுக்கு இருக்கிறது என்று உச்ச நீதிமன்றம் சொன்னவுடனே, இதுகுறித்து விவாதிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் கூட்டம் நடத்தப்பட்டது. அந்தக் கூட்டத்தின் முடிவின்படி, மூத்த வழக்கறிஞர்களிடமெல்லாம் கருத்துகள் கேட்கப்பட்டன. உடனே ஒரு சட்டப் பாதுகாப்பு பெற வேண்டுமென்பதற்காக, மூல வழக்கு நிலுவையில் இருந்தாலும், புதிய வழக்காக உச்ச நீதிமன்றத்தில் நாங்கள் தொடுத்திருக்கிறோம். இது ஒரு நல்ல விஷயம்.

நாம் எல்லோரும் ஒரே கொள்கையில்தான் இருக்கிறோம். இது ஒரு நல்ல விஷயம். ஆகையால், இந்த விஷயத்தை எதிர்க்கட்சியிலுள்ள நீங்களும் பாராட்ட வேண்டும்; ஏற்றுக்கொள்ள வேண்டும். தமிழக அரசு தொடர்ந்த இந்த வழக்கில் யார் வேண்டுமானாலும் இனிமேல் இணைந்து கொள்ளலாம். இதில் நாம் எல்லோரும் சேர்ந்து போராட வேண்டும். ஆகவே,உச்சநீதிமன்றத்தில்இந்தியமருத்துவக்குழுமத்தின்சட்டப்பிரிவு 10D-ஐ challenge செய்ய வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். அதனால்தான் இந்த வழக்கைத் தொடுத்திருக்கிறோம்.

2020 ஜனவரி 8] **[டாக்டர் சி. விஜய பாஸ்கர்]**

ஆகையால், 6 ஆம் தேதியையும், 4 ஆம் தேதியையும் ஒப்பிட்டு 'இது ஒரு நாடகம்' என்று நீங்கள் வெளியிட்ட ஓர் அறிக்கையை நான் பார்த்தேன். அது ஏற்புடைய கருத்து அல்ல; அந்த நிலையில்லை. அன்றிலிருந்து இன்று வரை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு நீட் தேர்வு எதிர்ப்பு கொள்கையில் தொடர்ந்து உறுதியாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்களே கேட்டீர்கள். அப்படியென்றால், இதே நிலையில் நீங்கள் இருந்திருந்தால் என்ன கேட்டிருப்பீர்கள்? நீங்கள் மத்திய அரசுக்கு இரண்டு மசோதாக்களை அனுப்பினீர்கள், நீங்கள் வேறு எதுவுமே செய்யவில்லை. நீதிமன்றத்தில் வழக்கைத் தொடுக்கவில்லை என்றால் நீங்களே கேள்வி கேட்டிருப்பீர்கள்.

இப்போது நான் ஒரே ஒரு கேள்வியைத்தான் கேட்கிறேன். மூல வழக்கு நிலுவையில் இருக்கிறது. ஏற்கெனவே Regulation *இருந்தது, இப்போது* Act *ஆக மாறிவிட்டது.* Act*–ஐ எதிர்த்து* petition Supreme Court*–ல்* pending*–ல் இருக்கிறது. இப்போது, நாம் அந்த* Act*–ஐ எதிர்த்து* prayer*–ஐ மாற்றி, பிரிவு* 10D*–ஐ* challenge *செய்து வழக்குப் போட்டிருக்கிறோம். இந்த வழக்கு போட்டது சரியா, தவறா என்பதை நீங்கள் சொல்லுங்கள். நான் அதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். உச்ச நீதிமன்றத்தில் பிரிவு* 10D*–ஐ* challenge *செய்து நம்முடைய மாநில அரசு தொடுத்திருக்கிற வழக்கு ஏற்புடையதா, இல்லையா? அதை, நாம் செய்திருக்க வேண்டுமா, வேண்டாமா என்பதை நீங்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

***திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமாக விவரங்களைச் சொல்வதில் கெட்டிக்காரர். நாங்கள் தெரிந்துகொள்வதற்காகத்தான் கேட்கிறோம், முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் இருந்த வரையில் நீட் தேர்வு தமிழ்நாட்டில் தலை காட்டவில்லை. அந்த அம்மா மிகவும்* stubborn *ஆக இருந்தார். நான் சும்மா சொல்லமாட்டேன்; பாராட்டுகிறேன். அதில் ஒன்று முடிந்துபோய்விட்டது. அந்த அம்மா மறைந்த பிறகுதான், இந்த நீட் தேர்வு தமிழ்நாட்டில் தலைகாட்டியது. அதற்கு என்ன காரணம்? நீங்கள்தான் காரணம். இரண்டாவது, இப்போது, நீட் தேர்வு வந்துவிட்டது. அது தற்போது நடைமுறையில்*

[திரு. துரைமுருகன்] [2020 ஜனவரி 8

வந்துவிட்டது. இப்போது ஒரு வழக்கு போட்டிருக்கிறீர்கள். இந்த வழக்கில் என்ன நீங்கள் சாதிக்கப் போகிறீர்கள்? இப்போது போட்டிருக்கிற வழக்கில் அரசு என்ன சாதிக்கப் போகிறது? என்னுடைய கேள்விகளுக்குப் பெரிதாக இல்லாமல், மிகவும் தெளிவாக, சுருக்கமாக பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) வழக்கு தேவைதான். அந்த வழக்கில் என்ன செய்யப் போகிறீர்கள்?

பிற்பகல் 12–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டது உச்ச நீதிமன்றத்தில் மூல வழக்கு இப்போது நிலுவையில் இருக்கிறது. டிசம்பர் 12 ஆம் தேதி அது hearing–க்கு வந்தது. அதில் இந்திய மருத்துவக் குழுமத்தின் சட்டப் பிரிவு 10D–ஐ challenge செய்வதற்கான provision இருக்கிறது என்ற நீதிமன்றத்தின் உத்தரவை நான் வைத்திருக்கிறேன். Judgement நான் வைத்திருக்கிறேன். அதில் 'you have a provision to challenge section 10D of Indian Medical Council at appropriate timings in accordance with law' என்று judgement கொடுத்திருக்கிறார்கள். தமிழக அரசின் சார்பில் திரும்பவும் உச்ச நீதிமன்றத்தில் புது வழக்கு தொடுத்திருக்கிறோம். அரசு வழக்கு தொடுத்தது சரியா, இல்லையா என்று நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்டேன். அதற்கு உங்களிடம் பதில் இல்லை.

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கடைசியாக என்ன கேட்டீர்கள் என்பது எனக்கு ஒன்றும் புரியவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தவரைக்கும் நீட் தேர்வு இல்லை என்ற மாதிரி நிலை தற்போது இல்லை.ஏனென்றால்நான்சொன்னதுபோலதொட்டிலையும்ஆட்டி, பிள்ளையையும் கிள்ளிவிட்டது நீங்கள். நடுவில் வந்து, தொட்டிலை ஆட்டி விட்டு, நான் தொட்டிலை ஆட்டுகிறேன் என்று சொல்வது ஏற்புடையதா? நீங்கள் புரட்சித் தலைவி அம்மாவைச் சொல்கிறீர்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதே சட்டமன்றத்திலும், வெளியிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தோடு நீட் தேர்வு குறித்த வாதம் வந்தபோது ஒரேயொரு கருத்தைச் சொன்னார்கள். 'திராவிட முன்னேற்றக் கழகம், இந்த நீட் கொள்கையில் தும்பை விட்டு வாலைப் பிடிக்கிறீர்கள்' என்று சொன்னார்கள். இது கிராமத்துப்

2020 ஜனவரி 8] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

பழமொழி. தும்பை எப்பொழுது விட்டோம். நீங்கள் 2010 ஆம் ஆண்டு ஆட்சியில், அதிகாரத்தில், கொள்கையில், கோட்டைக்கொத்தளத்தில், alliance–ல் இருந்தபொழுது தும்பை விட்டோம். வாலை எப்பொழுது பிடிக்கிறோம், திரும்பவும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னர் வாலைப் பிடிக்கிறோம். 'தும்பை விட்டு வாலைப் பிடிக்கிறது ஏற்புடையதாக இருக்குமா?' என்பதுதான் என்னுடைய கருத்து. இந்தக் கொள்கையில்நாம் ஆக்கபூர்வமாக போய்க்கொண்டிருக்கிறோம். மூல வழக்கு நிலுவையில் இருக்கிறது. Act–ஐ எதிர்த்து ஆக்கபூர்வமாக வழக்கு தொடர்ந்திருக்கிறோம். (குறுக்கீடு) என்ன Madam, சொல்லுங்கள் Madam. (குறுக்கீடு)

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு அமைச்சர், நான் பதில் சொல்லட்டுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தும்பை விட்டு வாலைப் பிடிப்பதாக திரும்பத் திரும்ப அதையே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார். கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தவரையில், நீட் நுழைவுத் தேர்வு உள்ளே நுழையவில்லை. அதைத்தான் எங்கள் துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது இங்கே குறிப்பிட்டுச் சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுதும், தமிழ்நாட்டுக்குள் அந்த நீட் தேர்வு நுழைய முடியவில்லை. நீதிமன்றத்திற்குச் சென்று தமிழ்நாட்டிற்கு நீட் நுழைவுத் தேர்வு வரக் கூடாது என்று தடை உத்தரவைப் பெற்று வைத்திருந்தவர் அன்றைக்கு முதல்வராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு நீங்கள் நீதிமன்றத்திற்குச் சென்றது தவறு என்று சொல்லவில்லை. அது காலத்தின் சூழ்நிலை, அதன் கெடு முடிந்துவிட்டது. கடைசி நாள் முடிவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறீர்கள். ஆனால் அதற்கு முன்னர் எத்தனையோ முறை இதே அவையில் இதுகுறித்துப் பேசப்பட்டிருக்கிறது. பல முறை நீங்களும் விளக்கம் கொடுத்திருக்கிறீர்கள். மாண்புமிகு சட்டத் துறை

[திரு. மு.க. ஸ்டாலின்] [2020 ஜனவரி 8

அமைச்சர் அவர்களும் விளக்கம் கொடுத்திருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சட்டமன்ற சிறப்புக் கூட்டத்தைக் கூட்டுகிறேன் என்று சொல்லியிருக்கிறார். ஏன் இடையில் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை? உங்களுடைய தேர்தல் அறிக்கையிலும் இது வெளியிடப்பட்டிருக்கிறது. உங்களுடைய பொதுக் குழுவிலும் இதுகுறித்து தீர்மானம் போட்டிருக்கிறீர்கள். ஆக, நீங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை, இதை வரவேற்கிறீர்கள் என்று நான் சொல்லவில்லை. ஆனால் இப்பொழுது நீங்கள் தும்பை விட்டு வாலைப் பிடித்துக்கொண்டிருக்கிறீர்கள் என்பதுதான் உண்மை. அதைத்தான் நான் இங்கே பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தும்பை விட்டு வாலைப் பிடிப்பது' என்று சொல்கிறீர்கள். யார் பிடிக்கிறோம்? குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு ஆதரவு அளித்துவிட்டீர்கள். இப்பொழுது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதுபோல் காட்டிக்கொள்கிறீர்கள். தும்பை விட்டு வாலைப் பிடிப்பது நீங்களா? நாங்களா? (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் நான் பலமுறை பதில் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) இந்த அவையில் நான் பலமுறை பதிய வைத்திருக்கிறேன். ஏற்கெனவே தமிழகத்தில் +2 அடிப்படையிலான தேர்வின் அடிப்படையில்தான் எல்லா மாணவர்களும் தேர்வு எழுதி மருத்துவப் படிப்புக்குத்

2020 ஜனவரி 8] [*டாக்டர் சி. விஜய பாஸ்கர்*]

தேர்வு செய்யப்பட்டுக் கொண்டிருந்தார்கள். +2 மதிப்பெண் அடிப்படையிலே தொடர்ந்து தேர்வு நடக்கவேண்டும். கூடுதலாக entrance examination வேண்டாம். Entrance examination என்கிற கொள்கையே வேண்டாம் என்று முதலில் அரசாணை பிறப்பித்தது புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதை எதிர்த்து (மேசையைத் தட்டும் ஒலி) Court–ல் பிரியதர்ஷினி என்பவர் தொடர்ந்த வழக்கில்தான் Court–ல் வழக்கு வந்தது. இந்தமாதிரி ஒரு நடைமுறை இருந்தபொழுது முதன்முதலில் யார் தும்பை விட்டு வாலைப் பிடித்தது? 2010 ஆம் வருடம், டிசம்பர் மாதம் 27 ஆம் தேதி காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபொழுது, திராவிட முன்னேற்றக் கழகம் கூட்டணி மந்திரிசபையில் இடம்பெற்றிருந்தபொழுது, இந்தியா முழுக்க, நாடு முழுக்க National Entrance Eligibility Test என்ற test–ஐ வைத்ததே நீங்கள்தானே? (குறுக்கீடு) அதை நீங்கள்தானே வைத்தது? அதற்கு விளக்கம் சொல்லுங்கள். அது உண்டா, இல்லையா என்று சொல்லுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 2010 ஆம் வருடம், டிசம்பர் மாதம் 27 ஆம் தேதி நீட் என்கிற ஒரு policy matter–ஐ கொண்டுவந்தது யார்? அந்த இடத்தில்தான் தும்பை விட்டீர்கள். தும்பை எங்கே விட்டீர்கள்? அந்த இடத்தில்தானே தும்பை விட்டீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: நாங்கள் கூட்டணியில் இருந்திருந்தாலும் நீதிமன்றத்திற்குப் போய் அதற்குத் தடை உத்தரவு வாங்கியிருக்கிறோமா, இல்லையா? நீங்கள் அதையே திருப்பித் திருப்பிச் சொல்கிறீர்களே! நீங்கள் இப்பொழுது மத்திய அரசுடன் கூட்டணியில்தானே இருக்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–15

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: தற்போது, நீங்களும், நானும் வாதத்திற்காக பேசினாலும், ஆவணங்களை யாராவது மாற்ற முடியுமா? (குறுக்கீடு) தற்போது, நீங்களும், நானும் வாதத்திற்கு எதை வேண்டுமானாலும் பேசினாலும், ஆவணங்களை யாரும் மாற்ற

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2020 ஜனவரி 8

முடியாது; தேதியை யாரும் மாற்ற முடியாது; கருத்துகளை யாரும் மாற்ற முடியாது.

மாண்புமிகு அம்மா அவர்கள், நீட் தேர்விற்கு ஓராண்டு விலக்கு பெற்றபோது regulation இருந்தது; அப்போது regulation இருந்தது; மாண்புமிகு அம்மா அவர்கள், ஓராண்டு விலக்கு பெற்றார்கள். Now, the Regulation has became an Act. 2016 ஆம் ஆண்டு Regulation, Act ஆக மாறிவிட்டது; Dental படிப்புக்கு 2018–ல் மாறிவிட்டது; 2019–ல் medical படிப்புக்கும் மாறிவிட்டது. Act ஆனதற்குப் பிறகு, அதை சட்டரீதியாகத்தான் நாம் சந்திக்க முடியும். அதனால்தான், சட்டரீதியாக இந்த அரசு புது வழக்கைத் தொடுத்திருக்கின்றது. மூல வழக்கும் நிலுவையிலிருக்கிறது; புது வழக்கையும் தொடுத்திருக்கின்றோம். உங்கள் கட்சியிலும் சட்ட வல்லுநர்கள் இருக்கிறார்கள். அந்த சட்ட வல்லுநர்களை அழைத்துக் கேளுங்கள். 'அரசு செய்தது சரியான நடவடிக்கை' என்று உங்கள் கட்சியைச் சேர்ந்த சட்ட வல்லுநர்கள் உங்களுக்கே சொல்வார்கள். எனவே, நான் மீண்டும், மீண்டும் சொல்கிறேன்; அவ்வாறு சொன்னால், காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் அண்ணன் அவர்களுக்கு மீண்டும் என்மீது வருத்தம் வந்துவிடும். எனவே, ஏற்கெனவே பதிய வைத்த விஷயங்களை நான் மீண்டும் பதிய வைக்க வேண்டாம் என்றிருக்கிறேன். Policy matter–ஐ காங்கிரஸ் ஆட்சியில் கொண்டு வந்தார்கள்; நீங்கள் அவர்கள்கூட துணையாக இருந்துவிட்டீர்கள். அதைத்தான் சொல்கிறேன். நீங்கள் பிள்ளையைக் கிள்ளிவிட்டு, பிறகு தொட்டிலை ஆட்டுவது போன்று ஆட்டுகிறீர்கள்.

இந்த நீட் நுழைவுத் தேர்வு விவகாரம் ஒவ்வொரு கால கட்டத்திலும், உயர் நீதிமன்றம் சென்று, உச்ச நீதிமன்றம் வரை வளர்ந்து, தற்போது நமக்கு பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இன்றைய நிலையில் என்ன செய்ய முடியுமோ, அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அரசு மிகச் சரியாக, தெளிவாகச் செய்து வருகிறது; தொடர்ந்தும் செய்து கொண்டிருக்கிறது. எள் முனையளவுகூட எந்த இடத்திலும் தொய்வே கிடையாது.

நீங்களே என்ன கேட்டிருப்பீர்கள்; "சார், நீங்கள் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் 2 மசோதாக்களைப் போட்டீர்கள், நீங்கள் என்ன முயற்சி அதன் மீது எடுக்கிறீர்கள்? நீங்கள் மசோதாக்களை மட்டும்தான் போட்டீர்கள், ஒவ்வோராண்டும்

2020 ஜனவரி 8] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

நீட் தேர்விலிருந்து விலக்கு கேட்டால் போதுமா?" என்று கேட்டீர்கள். நாங்கள் என்ன செய்கிறோம்; parallel ஆக நடவடிக்கை எடுக்கிறோம். Sir, multi dimension–ல் we are working. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இந்த விஷயத்தில் பல்முனை முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருகிறது. ஒருபுறம், சட்டமன்றத்தில் மசோதாவை நிறைவேற்றுகிறோம்; விளக்கம் கேட்கிறோம்; இன்னொருபுறம், நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து சட்டரீதியான பாதுகாப்பை எடுத்து வருகிறோம். Hearing 12 ஆம் தேதிதானே வருகிறது? அந்த வழக்கில் 12 ஆம் தேதி hearing வருகிறது. மூத்த வழக்கறிஞர்கள் அங்கு இருக்கிறார்கள். Section 10-D–ஐ challenge செய்கிற provision இருக்கிறது என்று உச்ச நீதிமன்றம் சொன்னபோது, உடனே நாம் வழக்கைத் தொடுக்கிறோம் என்பது எவ்வளவு பெரிய நல்ல விஷயம். இதை நீங்கள் பாராட்டாமல், வேறுவிதமான வார்த்தைகளைச் சொல்வது ஏற்புடையதாக இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே ஒரு சிறிய விளக்கத்தைக் கேட்கிறேன். ஏற்கெனவே இங்கு இந்த விவகாரம் குறித்து ஒரு தீர்மானம் போட்டு President–க்கு அனுப்பி வைத்தோம். President அதை withheld செய்துவிட்டார். அதற்குப் பிறகு, அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? மறுபடியும், ஒரு சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோன்று, மறுபடியும் ஒரு தீர்மானம் நிறைவேற்றி, மத்திய அரசுக்கு மறுபடியும் அழுத்தம் கொடுத்தீர்களா? கொடுக்கவில்லை. Withheld செய்த பிறகு, விட்டுவிட்டீர்கள். தும்பை correct ஆக பிடிக்க வேண்டும்; அதை ஏன் பிடிக்கவில்லை என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: ஒருவேளை தும்பை விட்டு வாலைப் பிடிப்பது என்ற பழமொழி உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால், நான் மிக அழகாகச் சொல்கிறேன். விதை போட்டவர்கள்

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2020 ஜனவரி 8

நீங்கள்; நீட் என்ற விதையை இந்த மண்ணிலே, இந்தியாவிலே விதைத்தவர்கள் நீங்கள். நீங்கள் விதைத்ததற்குப் பிறகு, நாங்கள் தண்ணீர் ஊற்றவில்லை, நாங்கள் வளர்க்கவில்லை என்று சொல்வது எப்படி ஏற்புடையதாக இருக்கும்? இதற்கு நீங்கள் கருத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) எப்படியென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) எப்பொழுது stay வாங்க வேண்டும்? Notification–ஐ கொடுத்ததே நீங்கள்தானே! (குறுக்கீடு) சரி, Stay எப்பொழுது வாங்க வேண்டும்?

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றம் சென்று, 18–7–2013 அன்று நீட் தேர்வே இனிமேல் கிடையாது என்ற ஒரு மகத்தான உத்தரவை வாங்கினார்கள். அதற்குப் பிறகு, பாரதப் பிரதமர் அவர்களுக்குத் தொடர்ந்து கடிதம் எழுதினார்கள். இதற்கு மேலேயாவது, நீங்கள் விட்டுவிடுங்கள், நீங்கள் ஏன் notification போட்டீர்கள்? MCI–க்கு அந்த power–ஏ இல்லை, MCI–க்கு அந்த அதிகாரமே இல்லை என்ற உத்தரவை வாங்கிய பிறகு, சீராய்வு petition போட்டது யார்? MCI–தானே போட்டார்கள். அப்போது ஆட்சியிலே இருந்தது யார்? காங்கிரஸ்–தி.மு.க. கட்சிகள்தானே ஆட்சியில் இருந்தன. சீராய்வு petition–ல்தானே அந்த உத்தரவு திரும்பப் பெறப்பட்டது; மறுபடியும் விசாரிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. (குறுக்கீடு) இல்லை, அனைத்துப் புள்ளிவிவரங்களும் என்னிடத்தில் இருக்கின்றன. (குறுக்கீடு) அதாவது, அனைத்துப் புள்ளிவிவரங்களும் என்னிடத்திலே இருக்கின்றன. நீட் விஷயத்திலே நீங்கள் எவ்வளவு பெரிய விவாதத்தை செய்தாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து தன்னுடைய கொள்கையிலே, நிலைப்பாட்டிலே உறுதியாக இருக்கிறது என்பதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை.

அந்த follow–up–ல் எள் முனையளவும்கூட, தொய்வு இல்லை. Proper monitoring, effective monitoring, proper follow–up on legal side, அரசியல் அழுத்தம், legal side, சட்டமன்றத் தீர்மானம் என multi dimension–ல், பல்வேறு வழிகளில் அரசு தொடர்ந்து தன்னுடைய நிலைப்பாட்டை செய்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே என்னுடைய பதிலாக நான் பதிய வைக்க விரும்புகிறேன்.